**20.02.2026**

**IP.No.6/2021**

**ம.சா.1 : திருவநாவுக்கரசு**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) இந்த நொடிப்பு நிலை மனுவில் புஷ்பராணியை 1ம் எதிர்மனுதாரராக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நிர்மலாதேவியை 2ம் எதிர்மனுதாரராக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுவில் புஷ்பராணி நொடிந்தவர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.207/2020 என்ற வழக்கு புஷ்பராணி மீது மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நிர்மலாதேவி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 22.06.2020-ல் தான் இந்த வழக்கு சொத்தை இந்த புஷ்பராணி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரயப்பத்திரம் உண்மையானது என்று ஒப்புக்கொள்கிறேன். அது பெயரளவில் தயார் செய்யப்பட்டது என்று என் தாவாவில் சொல்லி உள்ளேன் என்றால் சாட்சி மௌனமாக இருக்கிறார். என்னுடைய மனுவில் பாரா 6ல் சொல்லி உள்ள சங்கதிகள் மேற்படி ஆவணம் Sham and nominal என்று சொல்லி உள்ளதில் ஒரு கிரயம் பபத்திரம் Sham and nominal என்று விளம்புகை செய்யப்படாத பட்சத்தில் மேற்படி இந்த நொடிப்பு நிலை மனுவில் அதை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

2) அசல் வழக்கு எண்.207/2020 என்ற வழக்கில் ரூ.3.80 லட்சம் 1ம் எதிர்மனுதாரர் புஷ்பராணி 05.05.2018 கடன் வாங்கினார் என்றும் அந்த கடனை அவர் திருப்பி செலுத்தாததால் மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.ரூ.3.80 லட்சம் தொகைக்கு 100 க்கு 12 சதவீத வட்டி கோரி கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. 06.05.2020-ல் ஆறுமுக

வழக்கறிஞர் வைத்து நோட்டீஸ் அனுப்பி மேற்படி வழக்கை போட்டேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் 12 சதவீத வட்டி என்று குறிப்பிட்டு புஷ்பராணிக்கு தான் அனுப்பி உள்ளேன் என்றால் சரிதான். நான் புஷ்பராணிக்கு ஒரு முறை மட்டும் தான் ரூ.3.80 லட்சம் கடன் கொடுத்தேன் என்றால் சரிதான். 10.01.2019ல் இதே புஷ்பராணிக்கு டி.ரங்கசாமி என்ற வழக்கறிஞரை வைத்து அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை. பதிவு தபால் மூலம் அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுப்பவில்லை.

3) நான் மேற்படி நோட்டிஸ்சில் 18 சதவீதம் வட்டி கோரி புஷ்பராணிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றும் தற்போது வழக்கிற்காக அதை அனுப்பவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி நோட்டிஸ்சை நான் புஷ்பராணிக்கும் அவருடைய கணவர் காமராசுக்கும் அனுப்பிவிட்டு தற்போது அனுப்பவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிர்மலாதேவியின் கணவர் பெயர் பாலமுருகன். பாலமுருகன் கிரய ஒப்பந்தம் செய்துள்ளார் என்று தெரியவருகிறது என்று இம்மனுவில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரய ஒப்பந்தம் 04.05.2020ல் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

4) நான் 08.06.2020 தேதியில் மேற்படி கடனுறுதி சீட்டு வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாவா தாக்கல் செய்ததற்கு முன்னாடியே கிரய ஒப்பந்தம் போட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு தெரிந்து இருக்கும் போது மேற்படி தாவாவில் மேற்படி நபரை அசல் வழக்கு எண்ணில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரய ஒப்பந்தம் சுவாதீனமுள்ள கிரய ஒப்பந்தம் என்றால் சரிதான். அந்த கிரய ஒப்பந்தத்தை இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 04.05.2020 சுவாதீனமுள்ள கிரய ஒப்பந்தம் செய்த பின்னிட்டு 3 மாதம் கழித்து தான் இந்த ஐபி மனு

10.07.2020 ல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுவை 3 மாதம் கழித்து தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் எனவே இந்த மனு கால தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.02.20 17:30:57 +0530

**Subordinate Judge, Attur.**